<u>மகிளா நீதிமன்றம், கடலூர்</u>

அமர்வு வழக்கு எண் **: 99/2021**

அரசுதரப்பு **2** -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **சுமதி** | **வயது** | 45 |
| கணவர் **பெயர்** | **சங்கர்** | **தொழில்** | **விவசாயம்** |
| **கிராமம்** | MGR nagar, Vijamanagaram | **சமயம்** | 12.05 P.M |
| **தாலூக்கா** | | **தேதி** | 12.07.2024 |
| **மாவட்டம்** | **கடலூர்** | | |

சட்டம் **44/1969-**ன் விதிமுறைகளின்படி சாட்சிக்கு **12.07.2024 -**ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது**. (** எதிரி ஆஜர் **)**

<u>பிரதம விசாரணை</u> **-** நான் தற்போது மேற்கண்ட விலசாத்தில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என் மகளை காதலித்து திருமணம் செய்தவர். எனக்கு 3 பிள்ளைகள். சத்தியா, சந்திரலேகா, சந்திரசேகர். என்னுடைய மூத்த மகளை 2009 ஆம் ஆண்டில் காதலித்து திருமணம் செய்துகொண்டார். என் மகள் 8 மாதம் வரைதான் எதிரியுடன் வாழ்ந்துவந்தார். இன்னொரு பெண்ணுடன் தொடர்பு உள்ளது. திருமணமானபிறகு என் மகள் கூட்டுக்குடும்பமாக அவருடைய மாமியார் வீட்டில் வசித்து வந்தார். எதிரிக்கு மற்றொரு பெண்ணுடன் தொடர்வு இருந்த விவரத்தை என்னுடைய மகளும் ஊர் மக்களும் என்னுடன் தெரியப்படுத்தினார்கள். என்னுடை மகள் 3 மாதம் கர்பமாக இருந்தார். என் மகளுக்கும் எதிரிக்கும் தினமும் சண்டை நடக்கும். என் மகள் என்னிடம் வந்து வருத்தப்பட்டு அழுவாள். எதிரி என் மகளிடம் வாகனம் வாங்கித்தரவேண்டும் என்றும் வற்புறுத்தி அடித்துள்ளார். சாமான் சீர் செட், நகை கேட்டு அடித்து என் மகளை அடித்தாக கூறினாள் நானும் செய்கிறேன் என்று கூறினேன். எதிரி வேறுறொரு பெண்ணுடன் தொடர்வு இருந்த பெண் கர்பமாகி குழந்தை பெற்றுவிட்டார். அந்த சமயத்தில் அவருடன் சேர்ந்து கந்தசாமி மற்றும் ஊர்க்காரர்கள் சேர்ந்து எதிரிக்கு அந்த பெண்ணை திருமணம் செய்து வைத்தார்கள் என் மகளை மறைத்து வைத்தனர். அந்த பெண்ணை அழைத்து வந்து இங்குதான் குடும்பம் நடத்துவேன் என்று எதிரி என் மகளிடமும் என்னிடமும் கூறினார். என் மகளும் நானும் முடியாது என்று சொல்லிவிட்டோம். என் வீட்டி என் பெண்ணை தங்கவிடவில்லை என்று சொல்லிவிட்டு அழைத்து சென்றுவிட்டார்கள். மறுநாள் 2011 புரட்டாசி மாதம் தேதி ஞாபகம் இல்லை. ஒரு வயதான பெண் என்னிடம் வந்து " அந்த அம்மா புள்ள போய்டாடி புள்ள

போய்டாடி என்று கையை விரித்து அழுதார்" உடனே அந்த ஊரை சார்ந்தவர் ஜெயராம் மற்றம் காமராஜ் ஆகியோர் என் மகளை ஆட்டோவில் எற்றிசென்றார்கள் அதே ஆட்டோவில் நானும் மருத்துவமனைக்கு சென்றேன். மகள் இறந்துவிட்டதாக மருத்துவர் கூறினார் அதிர்ச்சியில் நான் மயக்கமடைந்து விழுந்துவிட்டேன். என்னுடைய மகளை அடித்து கொன்றுவிட்டார்கள் என்று நான் கேள்விபட்டேன். அங்கு போலீசார் வந்து விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>- எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை என்று கருதப்படுகிறது.

<u>மறுவிசாரணை</u>- இல்லை.

மகிளா நீதிமன்றம், கடலூர்

அமர்வு வழக்கு எண் : **99/2021**

அரசுதரப்பு **3** -வது சாட்சியின் வாக்குமூலம்.

| பெயர் | சந்திரா | வயது | 50 |
|---|---|---|---|
| கணவர் **பெயர்** | **கதிர்வேல்** | **தொழில்** | **விவசாயம்** |
| **கிராமம்** | MGR nagar, Vijamanagaram | **சமயம்** | 12.20 P.M |
| **தாலூக்கா** | | **தேதி** | 12.07.2024 |
| **மாவட்டம்** | **கடலூர்** | | |

சட்டம் **44/1969-**ன் விதிமுறைகளின்படி சாட்சிக்கு **12.07.2024 -**ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது. **( எதிரி ஆஜர் )**

பிரதம விசாரணை - நான் தற்போது மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் என் பக்கத்து வீட்டுக்காரர்தான். அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. அ.சா.2 இறந்துபோன பெண்ணின் தாயார். 2011 -ல் மாதம், தேதி ஞாபகம் இல்லை. நான் வேலைக்கு சென்றுவிட்டு மதியம் 12.00 மணியளவில் மரத்தின் நிழலில் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது ஆஜர் எதிரி வெளியேயிருந்து வந்துகொண்டிருந்தார் அவருடைய வீட்டிற்கு சென்று அங்கு திடீரென்று அலரினார் கதவை திற என்று கத்தினார். ஏன் கத்துகிறார் என்று தெரிந்துகொள்ள நானும் பழனியம்மாளும் ஓடிசென்று பார்த்தோம். அருகே இருந்தவர்களை சத்தம்போட்டு அழைத்தேன். அருகில் இருந்தவர்கள் வந்து கதவை உடைத்தனர். அந்த பெண்ணை அருகில் இருந்தவர்கள் வெளியே எடுத்து வந்தார்கள். தூக்குமாட்டிக்கொண்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் உள்ளே சென்று பார்க்கவில்லை. அதற்குள் அவருடைய அம்மா வந்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். வேறொரு பெண்ணுடன் எதிரி தொடர்பு உள்ளதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை- எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை என்று கருதப்படுகிறது.

மறுவிசாரணை- இல்லை.